TNRM010053102022

முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.

முன்னிலை : திரு.எஸ். குமரகுரு, பி.எல்.,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

2024 ம் ஆண்டு ஜூலை மாதம் 22 ம் நாள் திங்கட்கிழமை

CMA(CS) No.14/2022
TNRM01-005310-2022
---

ஆறுமுகசாமி மேல்முறையீட்டாளர்...

/எதிர்/

1. துணைப்பதிவாளர், பரமக்குடி.
2. கூட்டுறவு சார்பதிவாளர்/கண்காணிப்பாளர், பரமக்குடி.

எதிர்மேல்முறையீட்டாளர்கள்...

இந்த பல்வகை உரிமையியல் மேல்முறையீட்டை அனுமதித்தும், 20.04.2022 அன்று ந.க.2138/2021/ச.ப. தண்ட தீர்வை எண் 01/2022-2023 ல் விசாரணை நடத்தி தண்ட தீர்வை அறிவிப்பின் கீழ் 12.07.2022 ம் தேதி தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1983 சட்டப்பிரிவு 87 ன் கீழ் வழங்கிய தண்ட வழக்கு தீர்ப்பாணையை ரத்து செய்ய வேண்டுமென்று மேல்முறையீட்டாளர் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

இந்த பல்வகை உரிமையியல் மேல்முறையீடானது 22.07.2024 ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மேல்முறையீட்டாளர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.J. சேக் இப்ராஹிம் M.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.P. முனியசாமி M.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், மேல்முறையீட்டாளரை அழைத்தும் ஆஜரில்லாததாலும், வாதுரை செய்ய வேண்டிய நிலையில் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்...

TNRM010053102022

# தீர்ப்புரை

மேல்முறையீட்டாளர் தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவமும் செய்யப்படவில்லை. மேல்முறையீட்டாளர்தரப்பில் போதுமான அவகாசம் வழங்கப்பட்டும் வாதுரை செய்ய முன்வரவில்லை. எனவே இந்த மேல்முறையீட்டு மனுவானது செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படுகிறது.

2024ம் ஆண்டு ஜூலை திங்கள் 22ம் நாளான இன்று என்னால் கையெழுத்திடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையுடன் தீர்ப்பாணை வழங்கப்படுகிறது.

**ஒப்பம்/ எஸ். குமரகுரு,**
**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**இராமநாதபுரம்.**

முதன்மை மாவட்ட நீதிமன்றம்,
இராமநாதபுரம்

CMA(CS) 14/2022

சீரான / வரைவு தீர்ப்புரை

நாள் 22.07.2024